**என்எஸ்பீ பண்ட் மனேஜ்மென்ட் கம்பனி லிமிட்டட் – 2017**

---

என்எஸ்பீ பண்ட் மனேஜ்மென்ட் கம்பனி லிமிட்டட்டின் (''கம்பனி'') 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இவ் அறிக்கை வழங்கப்படுகின்றது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான பணிப்பாளர் சபையின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு இருக்கின்றன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

### 2.3 பெறவேண்டிய கணக்குகள்

#### 2.3.1 பெறவேண்டியவை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

பொதுத் திறைசேரியிடமிருந்து பெறவேண்டியவையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 246,939,587 தொகையான மீதி 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொதுத் திறைசேரியால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் இத் தொகை கணக்காய்வுத் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 109,141,803 வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடும் போது ரூபா 538,843,262 வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 429,701,459 ஆன முன்னேற்றமொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது.

இலாபநட்டம் ஊடாக நிதிக் கருவிகளிலிருந்தான தேறிய இலாபம் நியாயப் பெறுமதியில் ரூபா 411,958,928 அல்லது 422 சதவீதத்தால் அதிகரித்தமை நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட இவ் முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

## 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

### 3.2.1 முக்கிய கணக்கீட்டு விகிதங்கள்

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் துறை விகிதங்களுடன் சேர்த்து மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான கம்பனியின் முக்கிய சில விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விகிதத்தின் வகை | ** துறை | கம்பனி | |
|---|---|---|---|
| | 2017 | 2017 | 2016 |
| **மூலதன போதுமை விகிதம்** | | | |
| இடர் நிறையிடப்பட்ட மூலதன போதுமை (சதவீதம்) (ஆகக் குறைந்தது 10%) | 56 | 22 | 25 |
| **இலாபத்தன்மை விகிதங்கள்** | | | |
| சராசரிச் சொத்துக்கள் மீதான திரும்பல் (சதவீதம்) | 5 | 5 | 1 |
| சராசரி உரிமை மூலதனம் மீதான திரும்பல் (சதவீதம்) | 13 | 20 | 5 |
| வரிக்கு முன்னரான இலாபம் (ரூபா. மில்லியன்) | 15,100 | 539 | 109 |
| வரிக்குப் பின்னரான இலாபம் (ரூபா. மில்லியன்) | 13,400 | 363 | 79 |
| அடிப்படை மூலதனம் (Core Capital) (ஆகக் குறைந்த அடிப்படை மூலதனம் ரூபா 1,000 மில்லியன்) | | 1945 | 1,691 |

** இலங்கை மத்திய வங்கியால் துறை விகிதங்கள் வெளியிடப்படுகின்றன.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் இடர் நிறையிடப்பட்ட மூலதன போதுமை விகிதமானது துறை விகிதத்தை விடக் குறைவாக இருந்ததுடன் இது 2016 ஆம் ஆண்டிற்கு எதிராக 12 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஆ) கம்பனியின் சராசரிச் சொத்துக்கள் மீதான திரும்பல் விகிதம் மற்றும் சராசரி உரிமை மூலதனம் மீதான திரும்பல் விகிதம் என்பன 2016 ஆம் ஆண்டில் முறையே 1 சதவீதம் மற்றும் 5 சதவீதத்திலிருந்து 2017 ஆம் ஆண்டில் முறையே 5 சதவீதம் மற்றும் 20 சதவீதம் வரை அதிகரித்திருந்தன. மேலும், மீளாய்வாண்டிற்கான ஆர்ஓஏ விகிதம் தொழில்துறை விகிதத்தை போல் காணப்பட்ட போதிலும் ஆர்ஓஈ விகிதம் தொழில்துறை விகிதத்தை விட உயர்வாகக் காணப்பட்டது.

(இ) கம்பனியின் அடிப்படை மூலதனம் 2016 ஆம் ஆண்டில் ரூபா 1,691 மில்லியனிலிருந்து 2017 ஆம் ஆண்டில் ரூபா 1,945 மில்லியன் வரை 15 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இது மேற்படி ரூபா 1,000 மில்லியன் ஆகக் குறைந்த அடிப்படை மூலதன தேவைப்பாடாக காணப்பட்டது. ''கம்பனி மிகையூதியப்

பங்குகளை வெளிப்படுத்தியிருந்தமை அடிப்படை மூலதனம் அதிகரித்தமைக்கான காரணமாக இருந்ததென கம்பனியின் சீஈஓ அறிவித்திருந்தார்.''

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 திட்டமிடல்

2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கான கூட்டிணைந்த திட்டம் அல்லது செயல்நடவடிக்கைத் திட்டத்தை கம்பனி தயாரித்திருக்கவில்லை.

### 4.2 சந்தைப் பங்கு

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் கம்பனியின் மொத்தச் சொத்துக்கள் மற்றும் தொழில்துறையின் மொத்தச் சொத்துக்கள் என்பன முன்னைய ஆண்டில் முறையே ரூபா 10,862 மில்லியன் மற்றும் ரூபா 264,500 மில்லியனாக இருந்ததுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா 9,159 மில்லியன் மற்றும் ரூபா 337,200 மில்லியனாக காணப்பட்டன. கம்பனியின் சொத்து அடிப்படையிலான சந்தைப் பங்கு 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 3 சதவீதத்திலிருந்து 4 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. 2016 ஆம் ஆண்டிற்கு எதிராக 2017 ஆம் ஆண்டில் அரசாங்க பிணைகளிலுள்ள முதலீட்டில் 20 சதவீதத்தால் ஏற்பட்ட வீழ்ச்சி இதற்குப் பிரதான காரணமாக இருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

கம்பனியில் தனியான கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருக்காததுடன் தேசிய சேமிப்பு வங்கியின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது கிரய வினைத்திறனான கணக்காய்வுத் தொழிற்பாட்டைக் கொண்டிருப்பதற்காக என்எஸ்பீ நிதிய முகாமைத்துவக் கம்பனிக்கான உள்ளகக் கணக்காய்வாளராக தொழிற்படுகின்றது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்பு |
| --- | --- |
| திட்டமிடல் | கம்பனியானது அதன் பிரதான நோக்கங்களை இலக்கு காலப்பகுதியினுள் அடைந்துகொள்வதற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்றை தயாரிப்பதற்கு வேண்டப்பட்டிருந்தது. |